தமிழ் நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1974 சனவரி 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Tamil Nadu Administrative Reforms Commission

* 91 *Q*.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Administrative Reforms Commission has completed its work; and

(*b*) if not, when is its work likely to be completed ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) உத்தேசமான திட்டத்தின்படி, நிர்வாக சீர்திருத்தக் குழுவின் வேலை ஏப்ரல், 1974-ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, The Administrative Reforms Commission have submitted a report on panchayat development administration. அது இங்கு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 83 சிபார்சுகள் இருக்கின்றன. குறிப்பாக டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மென்ட் கவுன்சில் பற்றியெல்லாம் சிபார்சு கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு பரிசீலனை செய்திருக்கிறதா ? அப்படியானால், எந்த எந்த சிபார்சுகளை அமல் நடத்துவதாக அரசு உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மொத்தமாக இந்தக் குழு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய துறைகள் 17 துறைகள் என்று பிரித்துக் கொடுக்கப்

பட்டிருக்கின்றன. அவற்றிலே இதுவரை ஆறு துறைகளுக்கான அவர்களுடைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தருகின்ற அந்த அறிக்கைகளை மீண்டும் அரசின் சார்பில் ஆராய்ந்து அரசின் முடிவுகளை மேற்கொள்ளுவதற்காக ஒரு துணைக் குழு அமைக்கப்பட்டு, தலைமைச் செயலாளருடைய தலைமையில் அந்தத் துணைக் குழு இயங்கி வருகிறது. இதுவரை தரப்பட்டுள்ள ஆறு அறிக்கைகளைப் பரிசீலித்து வருகிறது. அப்பரிசீலனை முடிந்தபிறகு அவைகளைப்பற்றிய அறிக்கைகள் அவையிலே வைக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : நம்முடைய பப்ளிக் சர்விஸ் கமிஷன் நல்ல திறமையான முறையில் டெபுடி கலெக்டர்களையும், டி.எஸ்.பி.-க் களையும், தேர்ந்தெடுக்கிறது. இன்றையதினம் நிர்வாகத்தில் 'காடர் போஸ்ட்', 'நான்-காடர் போஸ்ட்' என்று இருப்பதில், நான்-காடர் பதவிகள் ஐ.ஏ.எஸ்.-க்குச் சமமாக இருக்கின்றன. தமிழ்நாடு அட்மினிஸ்ட்ரேடிவ் சர்விஸில் அப்படிப்பட்ட பதவிகளை உருவாக்கி, நம்முடைய பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலமாக நபர்களைத் தெரிந்தெடுக்கலாம் என்பது குறித்து ஏதாவது சிபார்சு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குழு அப்படியொன்றும் சிபார்சு செய்ததாகத் தெரியவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினையைப்போன்று ஒரு புதுமையான மாறுதல் தேவை என்கிற எண்ணம் நாட்டில் இருந்து வருகிறது. அதுபற்றி அரசு தேவையானபோது யோசிக்கும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்தக் குழு, டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் சர்விஸ் சம்பந்தமான ரிபோர்டில் சர்க்காரால் கைவிடப்பட்ட புஞ்சை நில வரியை மீண்டும் கொண்டுவரவேண்டு மென்ற ஒரு சிபார்சு செய்திருக்கிறதா ? அதுபற்றி அரசின் கருத்து என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, குழு சமர்ப்பிக்கின்ற எல்லா சிபார்சுகளையுமே அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றில்லை. குழுவினுடைய அறிக்கையை வைத்தே, அது அரசின் முடிவு என்று யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. முழு அறிக்கையின்மீது துணைக் குழு பரிசீலித்துக் கருத்துத் தெரிவித்த பிறகு அரசின் முடிவுகள் அமைக்கப்படும்.

1974 சனவரி 23]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாநிலத்திலும் தனி அட்மினிஸ்ட்ரேஷன் சர்விஸ் ஸுக்கு ஐ.ஏ.எஸ். போன்ற ஆபிசர்களை நியமனம் செய்கிற அமைப்பு முன்பு இருந்ததே, அதை மறு முறையும் கொண்டுவர இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா? அப்படிச் செய்தால் அது நல்லதொரு அமைப்பாக இருக்கும் என்று அரசு கருதுகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த நிர்வாக சீர்திருத்தக் குழுவின் வேலை முழுவதும் முடிவுற்றபிறகு வேண்டுமானால், மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவருடைய யோசனை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படலாம்.

District Training for Section Officers in Secretariat

* 92 *Q.*—THIRU R. R. MUNUSAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Secretariat Association has requested the Government to depute the Section Officers in the Secretariat for District Training; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த பிரிவு அலுவலர் 35 பேருக்கு ஓராண்டுக் காலத்திற்கு மாவட்ட நிர்வாகத்தில் பயிற்சியளிப்பதற்கான பயிற்சித் திட்டமொன்றைக் கொண்டு வந்து பொதுத் (பணிகள்-ஜே) துறையின் 16—11—1973 நாளிட்ட 2991-ஆம் எண் அரசாணையில் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. இத்திட்டம் குறித்த விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த பிரிவு அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்தில் பயிற்சி பெற அனுப்பப்படும்போது, மாவட்ட வாரியாகவும் வட்ட வாரியாகவும் பணியாற்றவேண்டும். அவர்கள் எந்த எந்தத் துறையில் எப்படி எப்படிப் பணியாற்றவேண்டும் என்று நம்முடைய அரசு நிர்ணயித்துள்ளதா?